பக்கங்கள்: 10

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 21 செவ்வாய்க்கிழமை 06.09.2022 கதிர் 303

### இது ரகசியம் அல்ல!

யாழ்ப்பாணம் வருவார், வருவார் எனக் கூறப்பட்ட சீனத் தூதர் இம்முறை யாழ்ப்பணம் வரவில்லை.

யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு என்று இம் முறை இருந்த அவரின் பயண ஒழுங்கில் கடைசி ☞2

# பிரிட்டிஷ் பிரதமராக லிஸ் டிரஸ் தெரிவு!




லண்டன்,செப். 06

இங்கிலாந்துப் பிரதமர் பதவிக்கான உள்கட்சிப் போட்டியில் ரிஷி சுனக்கை விட 21 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று லிஸ் டிரஸ் வெற்றி பெற்றார்.

இங்கிலாந்தில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சித் தலைவர் பதவியை போரிஸ் ஜான்சன் ராஜினாமா செய்தார். புதிய தலைவர் (பிரதமர்) பதவிக்கான தேர்தலில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ரிஷி சுனக்கிற்கும், அந்த நாட்டின் வெளியுறவு மந்திரி லிஸ்டிரஸுக்கும் இடையே கடும் போட்டி நிலவியது.

பிரதமர் பதவிக்கான வாக்குப் பதிவு கடந்த 2 ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. இந்த தேர்தலில் 1.60 லட்சம் கொன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் தபாலில் அல்லது இணையவழியில் வாக்கு அளித்தனர். பதிவான வாக்குகள் அனைத்தும் இன்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. இதில் எதிர்பார்த்தது போலவே லிஸ் டிரஸ் தேர்வு ஆனார். தன்னை எதிர்த்து போட்டியிட ரிஷி சுனக்கைவிட 21ஆயிரத்திற்கும் மேற் பட்ட வாக்குகளை பெற்ற லிஸ் டிரஸ் ஆளும் கொன்சர் வேட்டிவ் கட்சியின் தலைவராகத் தேர்வு ஆனார். ☞2

# பளையில் 1,840 ஏக்கர் காணி ராணுவத்துக்குத் தாரைவார்ப்பு

## விவசாயப் பண்ணை அமைக்கவாம்

(ந.லோகதநாளன்)

யாழ்ப்பாணம், செப்.05

பளைப் பகுதியில் காணிச் சீர்திருத்த ஆணைக் குழுவின் கீழ் உள்ள காணியில் இராணுவத்தினர் பண்ணை அமைக்க 1,840 ஏக்கர் நிலம் வழங்குவதற்கு அமைச்சரவை ஒப்புதலிற்கு பத்திரம் நகர்கின்றது. ☞2

## கிழக்குப் பல்கலைப் படுகொலை நினைவு தினம் நேற்று அனுஷ்டிப்பு





மட்டக்களப்பில் கிழக்கு பல்கலைக்கழக படுகொலை நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. 1990ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி ☞2

## 30 தோட்டாக்களுடன் ரவைக்கூடை பொலிஸிடம் ஒப்படைத்தவர் கைது!



காலிமுகத்திடல் போராட்டக்காரர்களில் ஒருவர் பெருந்தொகையான துப்பாக்கி ரவைகளுடன் பாணந்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் நேற்றுக் காலை பாணந்துறையில் நடைபெற்றுள்ளது. பாணந்துறை - கொரகான பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். ☞2

# உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நடைமுறைப்படுத்த அரசு நடவடிக்கையாம்!

## ஜெனிவா நெருங்க புதுக்கதை விடுகிறார் அமைச்சர் அலி சப்றி



உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த அவர், அந்த பொறிமுறையின் ஊடாக மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு முடிவு காண அரசாங்கம் முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.

ஜெனீவாவில் அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அமர்வில் இலங்கை அரசாங்கத்தை ☞2

## இன்று காலை கொழும்பு வருகிறார் எமில் காந்தன்



கொழும்பு, செப். 06

யுத்த காலத்தில் அரசுக்கும் புலிகள் தரப்புக்கும் இடை ஏற்பாடாளராகச் செயற்பட்டவர் எனக் கருதப்படும் எமில் காந்தன் டுபாயிலிருந்து இன்று காலை ரீலங்கன் விமானத்தில் கொழும்பு வந்து சேருவார் என நம்பகரமாகத் தெரியவந்தது.

## கோட்டாபய மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை வலுக்கிறது

இலங்கை திரும்பியுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும் எனப் பல்வேறு குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன . மக்கள் போராட்டத்தின் விளைவாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ஜூலை மாதம் இராணுவப் பாதுகாப்புடன் நாட்டைவிட்டு வெளியேறினார்.

73 வயதான அவர் சிங்கப்பூரிலிருந்து ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்கிறார் என அறிவித்தார், அங்கிருந்து தாய்லாந்து சென்று சில வாரங்கள் ஹோட்டலில் ☞9

## பரீட்சை திகதிகள் அறிவிப்பு

ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதி நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் உயர்தரப் பரீட்சையை டிசெம்பர் ☞2

# பொறுப்புக் கூறலில் இருந்து தப்புவதற்காக ஜெனிவாவில் அரசு கால அவகாசம் கோரும!

## முன்னுரைக்கின்றார் சுரேஷ் பிறேமச்சந்திரன்




(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம்,செப்.06

இலங்கை, பொருளாதார ரீதியாகப் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்துப் பின் தங்கியுள்ள இந்தச் சமயத்தில் நாட்டுக்கு எதிராக ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் அது நாட்டுக்குப் பாரதூரமான நிலையை ஏற்படுத்தலாம். ஆகவே அத்தகைய கடும்போக்குத் தீர்மான யோசனைத் திட்டத்தைத் தவிர்த்து ☞9

## ஒரு மணி நேர மின்வெட்டு

இன்று 06 ஆம் திகதி முதல் எதிர்வரும் 09 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் ஒரு மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்துவதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரத்தில் யாழ்ப்பாண விஜயம் வெட்டப்பட வேண்டியதாயிற்று.

இந்தப்பயணஏற்பாடுகளில்ஆரம்பத்தில் இருந்தே இரகசியம் பேணப்பட்டது. எனினும் தகவல் வெளியே நேரத்துடன் கசிந்து விட, சமய சந்தர்ப்பம் பார்த்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தங்கள் உள்ளத்து எரிச்சலை பகிரங்க சீற்றத்துடன் வெளிப்படுத்த, தமது யாழ் விசிட்டை ரத்துச் வேண்டியவரானார் சீனத் தூதுவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் பாடம் கிழக்கு பல்கலையில் சீனத்தூதுவருக்குப்போதிக்கப்படவில்லைப் போலும். அங்கு சீனத் தூதுவரின் 'சிலபஸ்'' தான் எடுபடுகின்றது.

நேற்று திருமலைக்கு வந்திறங்கிய அவரின் அணி நேற்றைய தினமே சில திட்டங்களை முன்னெடுத்தது.

பாடசாலைகளுக்கு ஸ்மாட் போட்கள் மற்றும் சோலர் லைற்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இதேநேரம் சீனாவின் யுனான் மாகாணமும் திருகோணமலை மாவட்டமும் இணைந்து சகோதர சிற்றி ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இன்று மட்டக்களப்பில் 150 பல்கலை மாண வர்களிற்கான புலமைப் பரிசிலின் முதல் மாதக் கொடுப்பனவு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கிடைக்கும். களுவங்கேணியில் 10 வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன.

சீனத் தூதுவர் யாழ் வராமல் தமது விஜயத்தை வெட்டிச் சுருக்கிக் கொண்டமை நம்மவர்கள் சிலருக்கு மனவருத்தம். அண்டிப் பிழைப்பவர்களுக்கு மன வருத்தமாகத்தான் இருக்கும்.

***

நமது யாழ்ப்பாணப் புத்தியை நண்டுப் புத்தி என்பார்கள். ஒரு குழிக்குள் சிக்கிக் கொண்ட நண்டுகளில் ஒரு நண்டு மேலே ஏறி வர முற்பட்டால் மற்ற நண்டுகள் அதை இழுத்து விழுத்தி விடுமாம். மேலேற விடாதாம். அது போன்ற கதை தான் இது.

நாட்டில் அதிகமான காணி வைத்திருப்பவர்களின் நிலங்களைச் சுவீகரித்து அரசாங்கம் பெற்றுக் கொள்ளும் ஒரு திட்டம்தான் காணி சீர்திருத்த ஒழுங்கு முறையாகும்.

அப்படி மேலதிகமாக மக்களிடம் இருந்தவை எனக் கருதி சுவீரிக்கப்பட்ட காணிகளை வைத்திருக்கும் காணிச் சீர் திருத்த ஆணைகுழு, வடக்கில் அந்தக்காணிகளை தன்னிச்சைப்படி தனியாள்களுக்கு – செல்வாக்குள்ளோருக்கு – தாரை வார்ப்பதாகச் செய்திகள் வெளியாகி உள்ளன.

அப்படித் தான் பெற்றுக் கொண்ட காணிகளை ஆணைக் குழு தனக்கு விரும்பியோருக்கு – அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் – வழங்கி வருவதாக நேற்று காலைக்திரில் முன்பக்கத்தில் செய்தி பிரசுரமாகி இருந்தது.

அதைப்பார்த்ததும் 'காணிகள் எமக்கு மட்டுமா கிடைத்தன? இன்னும் ஒரிடத்தில் 100 பேருக்கு தற்போது காணி கொடுக்கப் பட்டுள்ளதுதானே. அவர்களின் பெயர் விவரங்களையும், அடுத்து சிபாரிசு செய்தவர்களின் விவரங்களோடு பிரசுரியுங்கள்' – என்று நேற்று வெளியான செய்தியோடு தொடர்புடைய ஒருவர் கூறியிருக்கிறார்.

ஆக ஒரு நண்டு பற்றிய செய்தி வெளிவர, இப்போது மாறி மாறி மற்றைய நண்டுகள் குறித்தும் நமக்குத் தகவல் தர தொடங்கியுள்ளனர். இனி என்ன நமது செய்தியாளர் அவற்றை உறுதிப்படுத்தி வந்தால் வாசகர்களுக்கு முழு விவரமாக விடயங்களைத் தருவோம்.

- மின்னல் -

## கிழக்குப் பல்கலைப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு பல்கலைக்கழகம் இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு 157 பேர் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அவர்கள் காணாமல்ஆக்கப்பட்ட தினம் கிழக்கு பல்கலைக்கழக படுகொலை நினைவு தினமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வடகிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்டோர் அமைப்பின் ஏற்பாட்டில் இந்த நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு பல்கலைக் கழகத்தின் நுழைவாயிலில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதிகோரி கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசே கொடிய பயங்கரவாத தடைச் சட்டத்தை உடன் நீக்கு, எங்கே? எங்கே? உறவுகள் எங்கே?, எமக்கு எமது உறவுகள் வேண்டும், எமக்கு நீதி விசாரணை வேண்டும்,எமக்கு சர்வதேச விசாரணை வேண்டும்,1990-09-05அன்று வந்தாறுமூலை பல்கலைக்கழகத்திற்குள் வைத்து கைது செய்யப்பட்டவர்கள் எங்கே?'' - போன்ற பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இராணுவத்தினரால் கொண்டு செல்லப்பட்டு காணாமல் போனவர்கள் நினைவாக நினைவுச்சுடர் ஏற்றப்பட்டமையுடன் நினைவுரைகளும் நடைபெற்றன.

கிழக்கு பல்கலைக்கழகம் இராணுவத்தினரால்சுற்றிவளைக்கப்பட்டுகொண்டு செல்லப்பட்டவர்களில், சிறுவர்கள்,முதியவர்கள் இளைஞர்கள் எனப் பலர் காணாமலாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






## 30 தோட்டாக்களுடன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலிமுகத்திடல் போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த போது கண்டெடுத்ததாகக் கூறி வீ - 56 ரக துப்பாக்கியின் 30 தோட்டாக்கள் அடங்கிய ரவைக்கூடு ஒன்றை சந்தேக நபர் பொலிஸாரிடம் ஒப்படைக்க எடுத்து வந்துள்ளார்.

குறித்த ரவைக்கூடு காலிமுகத்திடலில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் இருந்து திருடப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அந்தப் போராட்டக்காரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் அவர் இதனைக் கொண்டு சமூகவிரோத செயற்பாடுகள் எதனையும் மேற்கொண்டுள்ளாரா என்பது குறித்தும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டுள்ள காலிமுகத்திடல் போராட்டக்காரரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பரீட்சை திகதிகள் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதம் 5 ஆம் திகதி முதல் ஜனவர் மாதம் 2 ஆம் திகதி வரையில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உண்மையைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதிநிதித்துவப்படுத்தி வெளிவிவகார மற்றும் நீதி அமைச்சர்கள் தலைமையிலான பிரதிநிதிகள் குழு பங்கேற்கவுள்ளது.

நேற்று ஜெனிவாவுக்குப் புறப்பட இருந்த சமயத்திலேயே, உண்மையைக் கண்டறியும் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்கும் என்ற புதிய கதையை அவிழ்த்து விட்டிருக்கின்றார் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி.

## பளையில் 1,840 ஏக்கர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிச் சீர் திருத்த ஆணைக்குழுவிற்கு பளைப் பகுதியில் தற்போது 4 ஆயிரம் ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 1,840 ஏக்கர் நிலம் விவசாய அமைச்சின் கீழ் இயங்கிய மக்கள் பெருந்தோட்டச் சபைக்கு 1988 இல் வழங்கியதாக அந்தச் சபை உரிமை கோரி வருகின்றது.

பெருந்தோட்டச் சபைக்கு 1988 இல் 1,840 ஏக்கர் நிலம் வழங்கியதற்கான ஆவணமோ சான்றுகளோ அந்தச் சபையிடமோ அல்லது ஆணைக்குழுவிடமோ இல்லாத சூழலிலும் சபை உரிமை கோரி வருவது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில் அந்தச் சபையின் பெயரில் நிலத்தை மாற்றி, இராணுவத்தினர் மூலம் அங்கு பெரும் பண்ணை அமைப்பதற்கு 1,840 ஏக்கரையும் சபையின் ஊடாக இராணுவத்தினருக்கு வழங்க எதிர்வரும் திங்கள்கிழமை 12 ஆம் திகதி இடம்பெறவுள்ள அமைச்சரவையில் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஏறபாடுகளையும் விவசாய அமைச்சு மற்றும் காணி அமைச்சு எனபன இணைந்து முன்னெடுப்பது தற்போது தெரியவந்துள்ளது.

## பிரிட்டிஷ் பிரதமராக .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமராகத் தேர்வான பிறகு பேசிய லிஸ் டிரஸ் –

கடும் போராட்டத்திற்குப் பிறகு பிரதமர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளேன். என் மீது நம்பிக்கை வைத்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். போரிஸ் ஜோன்சன், ரிஷி சுனக் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவேன். பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான திட்டம் செயல்படுத்தப்படும் – என்றார்.

இங்கிலாந்துப் பிரதமர் பதவிக்கான போடியில் வெற்றி பெற்றதையடுத்து ராணி எலிசபெத்தை லிஸ் டிரஸ் சந்திக்க உள்ளார். இங்கிலாந்து ராணி, லிஸ் டிரஸ் பிரதமராகத் தேர்வானமையை முறைப்படி அறிவிக்க உள்ளார்.

லிஸ் டிரஸ் இன்று பிரதமராகப் பதவியேற்க கூடும் என்று சொல்லப்படுகிறது.

ரிஷி சுனக்கிற்கு ஏமாற்றம்

இங்கிலாந்துப் பிரதமர் தேர்தலில் ரிஷி சுனக் வெற்றி பெற்றால் வெள்ளையர் அல்லாத முதல் இங்கிலாந்து பிரதமர் என்ற சிறப்பைப் பெறுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. துவக்கத்தில் முன்னணியில் இருந்த ரிஷி சுனக் இறுதி சுற்றுக்களின் போது திடீரென பின்னடவைச் சந்தித்தார். இதையே கருத்துக்கணிப்பு முடிவுகளும் பிரதிபலித்தன. ரிஷி சுனக் இன்போசிஸ் தகவல் தொழில்நுட்ப நிறுவனர் நாராயணமூர்த்தி, சுதா மூர்த்தி தம்பதியின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது,






# மின்சார வாகன இறக்குமதிக்கான விண்ணப்பப் படிவம் வெளியானது



இலங்கைகு சட்டபூர்வமான வழிகளில் பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த பணியாளர்களுக்கு வழங்கப்படும், மின்சார வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரத்துக்குரிய, விண்ணப்பம் தற்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் https://si.labourmin.gov.lk  என்ற இணையத்தளத்துக்கு பிரவேசிப்பதற்கு மூலம் அதற்கு விண்ணப்பத்தைப் பதிவிறக்கம் செய்ய முடியும்.

வங்கி முறையின் ஊடாக சட்டரீதியாக பணம் அனுப்பும் புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு பல சலுகைகளை வழங்குவதற்கு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனு நாணயக்கார நடவடிக்கை எடுத்துள்ளமையுடன், புலம்பெயர் பணியாளர்கள் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்வதற்கு முன்னதாக அமைச்சரவையும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதன்படி, மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான வர்த்தமானி அறிவிப்பு மற்றும் அனுமதி வழங்கும் விண்ணப்பம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வருடம் மே மாதம் முதலாம் திகதி முதல் அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை இலங்கைக்கு 3000 அமெரிக்க டொலர்களுக்கு மேல் வங்கி முறைமை மூலம் பணம் அனுப்பிய புலம்பெயர் பணியாளர்களுக்கு அவர்கள் அனுப்பிய பணத்தின் அளவில் 50 சதவீதம் பெறுமதியான மின்சார மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும்.

இந்த வருடம் மே முதலாம் திகதி முதல் எதிர்வரும் டிசம்பர் 31 ஆம் திகதி வரை இருபதாயிரம் அமெரிக்க டொலர்களை அனுப்பும் பணியாளர்கள் மின்சார வாகனத்தை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படுவார்கள் என்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வங்கி முறையின் ஊடாக சட்டரீதியாக பணம் அனுப்பும் பணியாளர்களுக்கு, விமான நிலையத்தில் கிடைக்கும் தீர்வை வரிச் சலுகையை 6,550 அமெரிக்க டொலர்களாக அதிகரிப்பதற்கும் அமைச்சர் மனு நாணயக்கார சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்திற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.



# சு.கவில் ஜனநாயகம் கொன்று புதைப்பாம்!

## சீறுகின்றார் சந்திரிகா

சுதந்திரத்தின் பின்னர் நாட்டில் மிகவும் ஜனநாயக கட்சியாக இருந்த சுதந்திரக் கட்சி தற்போது ஜனநாயகத்தைக் கொன்று குவித்துள்ளதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அத்துடன், கட்சியின் கொள்கை அழிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி, கட்சியின் கொள்கைகளையும், கட்சியையும் பாதுகாத்த மக்களுக்காகத் தொடர்ந்தும் பாடுபடுவேன் எனவும் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையில் புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# எரிசக்தி அமைச்சை நேற்று முற்றுகையிட்ட ஓட்டோக்கள்



தங்களுக்கான எரிபொருள் அளவை அதிகரித்து வழங்குமாறு கோரி ஓட்டோச் சாரதிகள் மின்சக்தி, எரிசக்தி அமைச்சை நேற்று முற்றுகையிட்டனர்.

ஓட்டோக்களுக்கு வாராந்தம் வழங்கப்படும் ஐந்து லீற்றர் எரிபொருள், தேவைக்கேற்ப போதுமானதாக இல்லை என்று ஓட்டோ சாரதிகள் தொடர்ச்சியாக விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். எனினும் அவர்களுக்கான எரிபொருள் கோட்டா இதுவரை அதிகரிக்கப்படவில்லை.

இந்நிலையில் ஓட்டோ சாரதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மின்சக்தி, எரிசக்தி அமைச்சின் முன்பாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று நேற்று நடைபெற்றது.

தங்களுக்கான எரிபொருள் கோட்டா அதிகரித்து வழங்கப்படும் வரை அந்த இடத்திலிருந்து தாங்கள் அகலப் போவதில்லை என்று அவர்கள் வலியுறுத்தினர்.

இதற்கிடையே எரிபொருள் விநியோகம் கிடைக்காத நிலையில் இன்றைய தினம் இலங்கையின் பல பாகங்களிலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிந்துள்ளது.

அதன் காரணமாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன்பாக முன்னர் போன்று நீண்ட வரிசைகள் உருவாகத் தொடங்கியுள்ளமையையும் காணக்கூடியதாக உள்ளது.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## நடக்கும் காரியமா இது?

'விடிய விடிய இராமாயணம், விடிந்த பின்னர் ராமனுக்குச் சீதை என்ன முறை எண்டானாம்' – இப்படி ஒரு பேச்சு வழக்கு நம்மிடைய உண்டு.

ஈழத் தமிழ் அகதிகள் தொடர்பில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்திருக்கும் நடவடிக்கை இந்தப் பேச்சு மொழிப் பாணியில்தான் அமைந்திருப்பது போல தோன்றுகின்றது.

ஒரு வருடத்துக்கு முன்னர் இருந்த இலங்கையின் நிலைமை வேறு, இன்றைய நிலைமை வேறு. இப்போது இலங்கை கடன் இறுக்க முடியாத நாடுகளின் பட்டியலில் சேர்க்கப்பட்ட ஒரு தோற்றுப் போன தேசம்.

இன்று ஓர் இறாத்தல் பாணின் விலை 300 ரூபா. அன்றாடம் காய்சிகளின் – சாமன்யனின் – இரண்டு நேரப் பசியை வழமையாக தீர்க்கும் அமிர்தமான பாணின் விலை அடுத்து வரும் மாதங்களில ஐந்நூறு ரூபாயை எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நாட்டின் பொருளாதார நிலைமை அத்தனை தூரம் சீர்கெட்டு போயிருக்கின்றது.

நாளுக்கு நாள் மோசம் அடையும் விலைவாசி ஏற்றத்துக்கு – பண வீக்கத்துக்கு – ஈடு கொடுக்க முடியாமல், மக்கள் பட்டினிச் சாவின் விளிம்பில் அல்லாடுகின்றனர்.

வாய்ப்புக் கிடைத்தால் நாட்டை விட்டுத் தப்பி ஓடியாவது பட்டினிச் சாவைத் தவிர்க்கலாம், வயிற்றைக் கழுவிப் பிழைத்துக் கொள்ளலாம் என்று மக்கள் சந்தர்ப்பம் பார்த்து, வாய்ப்புத் தேடி, அலைகின்றனர். பல நாள்கள் கடலில் சஞ்சரிக்கும் சிறிய கடற்கலங்களில் ஏறி, திக்குத் திசை தெரியாத கடல் பயணங்களையும் அவர்கள் ஆரம்பிப்பதும், கடற்படையினரிடம் மாட்டிக் கொள்வதும் தினசரி செய்திகளாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் நிர்க்கதி நிலையில் அல்லாடும் மக்கள் குறைந்த பட்சம் பக்கத்தில் உள்ள இந்திய நாட்டுக்காவது பஞ்சம் பிழைக்க ஓடித் தப்புவோம் என்று முயலுகின்றார்கள்.

கடல் பயண ஆபத்தைத் துச்சம் எனப் புறம் ஒதுக்க அவர்கள் தயார். அதைவிட, நாட்டில் பசியும், பட்டினியும், விலைவாசி உயர்வும், பற்றாக்குறையும் மிக மோசமானவை. அவை உயிர் எடுக்கும் காரணிகள் என்பது அவர்களின் கணிப்பு. ஆனால் இலங்கைப் படையினரின் கெடுபிடிக்கு மத்தியில் அவர்களின் கண்களில் மண்ணைத் தூவி விட்டுத் தப்பிச் செல்லும் மார்க்கம் இல்லாதமையால் இக்கரையில் பரிதவித்துக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் இப்போது இங்கிருந்து தமிழகத்திற்குத் தப்பிப்போய் எப்படியும் பஞ்சம் பிழைக்கலாம் என்று அலவாய்ப்பட்டு அந்தரிக்க –

இங்கு இலங்கை ஜனாதிபதியோ இந்தியாவில் ஏற்கனவே அகதிகளாக உள்ள இலங்கையர்களை நாட்டுக்குத் திருப்பி அழைப்பது குறித்து நடவடிக்கை எடுப்பதற்காக விசேட குழு ஒன்றை நியமித்திருக்கின்றார் எனச் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்தப் பொருளாதார சீரழிவுக்கு மத்தியில் இங்கிருப்போர் அகதிகளாக அங்கு தஞ்சம் பெற முயற்சிப்பார்களா அல்லது அங்கிருக்கும் அகதிகள் இங்கு வர விரும்புவார்களா?

இந்தச் சிறிய விவரம் கூடப் புரியாமல் எப்படி ஆட்சியை நடத்த போகிறார் நம் ஜனாதிபதி?

# கோட்டாபய ராஜபக்ஷ மீண்டும் அரசியலுக்குள் வர வேண்டாம்

## குமார வெல்கம வலியுறுத்து



இலங்கைக்கு விஜயம் செய்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு புதிய லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் குமார வெல்கம வாழ்த்து தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் மீண்டும் அரசியலுக்கு வரக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பத்தரமுலையில் இந்த கட்சியின் தலைமை அலுவலகத்தை நேற்று (திங்கட்கிழமை) திறந்து வைத்து உரையாற்றியபோதே வெல்கம இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

மஹிந்த நல்லவர் என்றாலும் அவர் நாட்டைவிட குடும்பத்துக்கு நெருக்கமானவர்.

இல்லையேல் அவருக்கு கடந்த முறை சீனியாரிட்டி கொடுத்த நிலையில், இன்று வேறு யாராவது இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருப்பார்கள். இவ்வாறான சம்பவமும் அவருக்கு நடந்திருக்காது.

2 வருடங்களுக்குள், கோட்டாபய ஜனாதிபதி பதவியைக் கைவிட்டு, இந்த நாட்டை விட்டு வெளியேறினார் என்று நான் நினைக்கிறேன். இப்போது அவர் வந்துவிட்டார். அவருக்கு நல்வாழ்த்துக்கள்.

நீங்கள் அங்கேயே இருங்கள். அரசியலுக்கு வராதீர்கள். ஏனென்றால் நீங்கள் அரசியலுக்கு தகுதியற்றவர். பிரதமர் பதவி தருவதாகச் சிலர் கூறுகின்றனர். அதைவிட உங்களுக்கு ஒரு நல்ல மனைவி இருக்கிறார். அவருடன் வீட்டில் இருந்தால் நன்றாக இருக்கும்.

மற்றவர்களின் ஏமாற்றங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள். ஏனென்றால் நாங்களும் நாடாளுமன்றத்தில் இருக்கிறோம். எமது வாய் நன்றாக இல்லை. எங்களுக்கு என்ன பேசுவது என்று தெரியாது' – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூவர் பளையில் கைது!

பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அல்லிப்பளை பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் உழவு இயந்திரம் மூன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பளை பிரதேசத்துக்குட்பட்ட அல்லிப்பளை பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு இடம்பெறுவதாக பளை பொலிஸாருக்குத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது.

இந்தனையடுத்து நேற்று (திங்கட்கிழமை) அதிகாலை சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மூன்று பேரை கைது செய்துள்ளதுடன், மண் அகழ்விற்காகப் பயன்படுத்திய மூன்று உழவு இயந்திரங்களையும் கைப்பற்றியுள்ளனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கறுப்பு சந்தையில் 25 ஆயிரம் ரூபா வரை உயர்ந்தது கோதுமை மாவின் விலை!

இலங்கையில் ஒரு மாதத்துக்குள் கோதுமை மா பிரச்சினையை அரசாங்கம் தீர்க்காவிட்டால் நாட்டில் பாண் உட்பட பேக்கரி உற்பத்தியை முற்றிலுமாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மக்கள் வரிசையில் நின்றாலும் பாண் ஒன்றை வாங்க முடியாத நிலை ஏற்படும் என அகில இலங்கை பேக்கரி சங்கத்தின் தலைவர் ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு கோதுமை மாவை இறக்குமதி செய்யும் செரண்டிப் மற்றும் பிரீமா நிறுவனங்கள் டொலர் பற்றாக்குறையால் இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்த டுபாய் மற்றும் சிங்கப்பூர் நிறுவனங்கள் 70 கோடி டொலர்களுக்கு மேல் கடனாக உள்ளதால், டொலரில் கைப்பணம் செலுத்தி மாவை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இந்தியாவில் இருந்து கோதுமை மா இறக்குமதி செய்யப்பட்ட போதிலும், அந்த நாட்டின் இறக்குமதி நிறுத்தப்பட்டுள்ளதால் இந்தியாவில் இருந்து கோதுமை மாவை இறக்குமதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தலைவர் தெரிவித்துள்ளார்.

அந்த விலையில் உற்பத்தி செய்தால் பாண் ஒன்றின் விலை 350 ரூபாவைத் தாண்டும். தின்பண்டங்கள் விலை 150 ரூபாவைத் தாண்டுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# அரசொன்று அவசியமில்லை என்பதையே பாணின் விலை அதிகரிப்பு காட்டுகின்றது!

## நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய அமைப்பு

பாணின் சடுதியான விலையேற்றம் பாணை மக்களினதும் அதனை மூலதாரமாக கொண்டு ஜீவனோபாயத்தை மேற்கொள்கின்ற பலதரப்பினரையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

இருப்பினும் நாட்டில் ஓர் இறாத்தல் பாணின் விலை தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்லும் போது அதைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுமாயின் இந்த நாட்டுக்கு அரசாங்கமொன்று அவசியமில்லை என்பதே அர்த்தம் என்று நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தெரிவித்துள்ளது.

நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்கும் தேசிய அமைப்பு தலைவர் ரஞ்சித் விதானகே இது தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையில், பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நாட்டு மக்கள் பாரியதொரு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்கிறார்கள்.

பாணின் தொடர்சியான விலை அதிகரிப்பு நாட்டு மக்களின் ஜீவனோபாயத்தை முழுமையாகப் பாதித்துள்ளது.

பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் நுகர்வோரில் பெரும்பான்மையானவர்கள் சிரமத்தில் வாழ்கின்றார்கள்.

மூன்று வேளைகள் உணவு உட்கொண்டவர்கள் இன்று இரண்டு வேளைகள் மாத்திரமே உணவு உட்கொள்கிறார்கள்.

மேலும் அண்மையில் 65 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட பாணின் விலை இன்று 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அரை இறாத்தல் பாண் மற்றும் பருப்புகரி சாப்பிடுவதற்கு இன்று 500 ரூபா தேவைப்படுகிறது.

இவ்வாறு செல்வதாக இருந்தால், பாணின் விலை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலை காணப்படுமாயின் இந்த நாட்டுக்கு அரசாங்கம் ஒன்று தேவையில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதம் இரட்டை எண்கள் எண்ணிக்கைக்கு அதிகரிப்பு

கொவிட் – 19 தடைகளை நீக்கிய பிறகு, பொருளாதார நடவடிக்கைகள் வேகம் கூடி, தொடர்புத் துறைகளில் தீவிரமான மறுமலர்ச்சி ஏற்பட்டு, இந்தியப் பொருளாதாரம் ஒரு வருடத்தில் மிக வேகமாக விரிவடைந்தது. சாதகமான அடிப்படை விளைவு மற்றும் பண்ணை, சேவைகள், கட்டுமானம் மற்றும் தனியார் நுகர்வு ஆகியவற்றில் வலுவான வளர்ச்சிக்கு அது உதவியது,

தேசிய புள்ளியியல் அலுவலகம் வெளியிட்ட தரவு, நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் – ஜுன் காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஆண்டுக்கு 13.5 வீதம் உயர்ந்துள்ளது, இது முந்தைய காலாண்டில் 4.1 வீதத்தை விட அதிகமாகும், ஆனால் 2021 – 22 முதல் காலாண்டின் 20.1 வீதத்தை விடவும் இது குறைவாக உள்ளது.

2022 – 23 முதல் காலாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியின் மதிப்பீட்டின் படி இது 16.2 வீதமாக இருக்க வேண்டும். அதை விட 13.5 வீத வளர்ச்சி என்பது குறைவாகவே உள்ளது.

ஜுன் காலாண்டில் உள்கட்டமைப்புக்கான மூலதனச் செலவினங்களுக்கான அரசு செலவினங்களில் முதலீடுகள் தொடர்ந்து மேம்பட்டு வருகின்றன என பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்தனர். ஆனால் 2020 நிதியாண்டின் முதல் காலாண்டின் தொற்றுநோய்க்கு முந்தைய காலத்துடன் ஒப்பிடும்போது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 3.8 வீதமாக இருப்பதாக மதிப்பீடுகள் காட்டுகின்றன.

ஜுன் காலாண்டில் விவசாயத் துறை வளர்ச்சி 4.5 வீதமாகவும், சேவைத் துறை 17.6 வீதமாகவும் இருந்தது. தனியார் நுகர்வு 25.9 வீதமாக அதிகரித்துள்ளது.




மொத்த நிலையான மூலதன உருவாக்கமும் திடமாக இருந்தது, இது உள்நாட்டு முதலீடுகளில் அதிகரிப்பை எடுத்துக்காட்டுகிறது. உற்பத்தி துறை வளர்ச்சி ஜுன் காலாண்டில் 4.8 வீதமாக இருந்தது. இது முந்தைய ஆண்டின் காலாண்டில் 49 வீதமாகும். சுரங்கம், உற்பத்தி மற்றும் மின்சாரத் துறைகள் பலவீனங்களைக் காட்டியமையுடன் பொருளாதார நிபுணர்களின் எதிர்பார்ப்புகளையும் பின்தள்ளியது.

நிதிச் செயலர் டி.வி.சோமநாதன், இந்த ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 7 முத 7.5 வீத வளர்ச்சி மதிப்பீட்டில் இந்த எண்கள் முழுமையாக ஒத்துப்போகின்றன.

மொத்த நிலையான மூலதன உருவாக்கம் (பொருளாதாரத்தில் முதலீட்டை மதிப்பிட பயன்படுகிறது) மற்றும் தனியார் நுகர்வு ஆகியவை முதல் காலாண்டில் மிகவும் வலுவாக இருந்தன, இது பொருளாதாரத்திற்கு மிகவும் நல்லது" என பொருளாதார விவகாரச் செயலாளர் அஜய் சேத் கூறினார்.

2020 முடக்கத்துக்குப் பிறகு உற்பத்தி நடவடிக்கைகள் அதிகரித்தன எனவும், டெல்டா அலையின் போது அது குறிப்பிடத்தக்க அளவில் பாதிக்கப்படவில்லை என்றும், பயணம் மற்றும் சுற்றுலா போன்ற தொடர்பு துறைகளுக்கு தீவிர அடிப்படை விளைவு ஏற்படுவதாகவும் அவர் கூறினார்.

தற்போதைய நிலையில், இந்தியாவின் முதல் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி மற்ற பெரிய பொருளாதாரங்களை விட அதிகமாக உள்ளது. ரியல் எஸ்டேட் போன்ற பல முக்கிய துறைகள் பாதிக்கப்பட்டு பொருளாதாரம் பல அழுத்தங்களுடன் சிக்கியதால் சீனாவின் முதல் காலாண்டு மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி 4.8 வீதமாக இருந்தது. உலகளாவிய மந்தநிலைக்கு மத்தியில் இந்தியா வேகமாக வளரும் பெரிய பொருளாதாரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தொற்றுநோய்க்கு பிந்தைய டெயில்விண்ட்ஸ் அடிப்படையில் 2023 நிதியாண்டின் முதல் காலாண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை உயர்த்தியது – நாம் குறைந்த அடித்தளத்தை தள்ளுபடி செய்தாலும், இது தொடர்ச்சியான வேகத்தில் ஒரு நட்சத்திர உயர்வைக் குறிக்கிறது. இது தொடர்பு – தீவிர சேவைகள் துறைகளில் பொது கேப்க்ஸ் புஷ் மற்றும் எளிதான நிதி நிலைமைகளின் பின்தங்கிய தாக்கம் கேட்ச் – அப் போன்ற டெயில்விண்ட்களின் சங்கமத்தைக் குறிக்கிறது. , என்று ஜப்பானிய முதலீட்டு வங்கியான நோமுராவின் இந்திய பொருளாதார நிபுணர் மற்றும் வி.பி.ஆரோதீப் நந்தி கூறுகிறார்.


**(மூலம்: 'ரைம்ஸ் ஒவ் இந்தியா')**

# தலைப்பா தலைவர்













சமீபத்தில் நடைபெற்ற 75ஆவது சுதந்திர தின விழாவில் பிரதமர் நரேந்திர மோடி அணிந்த இந்தியக் கொடி நிறத்திலான டேர்பன் (தலைப்பா) இணையத்தில் வைரலாகியது. இதேபோல காவி, சிவப்பு, பச்சை, பிங்க், மஞ்சள் என பல நிற டர்பன்களை பிரதமர் மோடி பல்வேறு விழாக்களில் அணிந்துள்ளார்.

பிரதமர் அணியும் இதுபோன்ற விதவிதமான டேர்பன்கள் அந்தந்த மாநிலங்களின் கலாசாரத்தை உலக நாடுகளிடையே பிரதிபலிப்பதால் அவ்வப்போது இவை சமூக வலைதளங்களில் டிரெண்டாவதுண்டு.

சில ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்நகர் அரச குடும்பம் பரிசளித்த 'பக்டி' டேர்பனை பிரதமர் அணிந்தார். இதை நேர்த்தியாக வடிவமைத்து தலையில் கட்டுவதற்கு தனித் திறமை வேண்டும். பிரதமர் மோடி அணிவதற்காக சில டேர்பன் கள் பிரத்யேகமாக வடிவமமைக்கப்படுவதுண்டு. நீண்ட வால் கொண்ட குஜராத்தி டேர்பன் மற்றும் அலங்காரப் பொருள்கள் கொண்ட ராஜஸ்தானி டேர்பன் உள்ளிட்டவை பிரதமர் அணிந்த டேர்பன்களில் அதிக வரவேற்பு பெற்றவை.

கிட்டத்தட்ட எட்டு அடி நீளம் கொண்ட டேர்பன் துணியில் மெல்லிய அலங்கார வேலைபாடுகள் செய்யப்படுகின்றன. இந்த நீண்ட துணியை கச்சிதமாக தலையில் கட்டி முடிக்க சில நிமிடங்களாவது ஆகும். இந்திய மாநிலங்கள் பலவற்றில் திருமணம் உள்ளிட்ட விழாக்களில் இந்த டேர்பன்களை ஆண்கள் அணிவது வழக்கம்.

ஒவ்வொரு ரக டேர்பனுக்கும் பிரத்தியேக நிறம் மட்டுமல்லாமல் கட்டும் விதமும் மாறுபடும். இதனை நாட்டின் பிரதமர் கட்டும்போது உலக நாட்டுத் தலைவர்கள் பலர் இந்தியாவின் பல்வேறு கலாசாரங்களை அறிந்து கொள்வர்.







# அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட புதிய கட்சி: பெயர்ப் பலகையால் ஏற்பட்டுள்ளது சர்ச்சை!

## மனோ கணேசன் சாடல்



விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினர் தமிழர் மீதும், தமிழ் பேசும் மக்கள் மீதும் எவ்வித அக்கறையும் தமக்கு இல்லை என்பதை மீண்டும் நிரூபித்துள்ளனர் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினர் தமது கட்சி கூட்டணியின் அங்குரார்ப்பணத்தை அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில்ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் –

விமல் வீரவன்ஸ தலைமையிலான அணியினர் தமது கட்சி கூட்டணியின் அங்குரார்ப்பணத்தை அறிவித்துள்ளனர். இதன்போது நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். அவர்களின் கட்சியின் பெயரை சிங்களத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்ப்பு செய்திருப்பது பிழையாக உள்ளது.

இதை பார்த்து ஒரு புறம் நான் கவலை அடைந்தாலும், மறுபுறம் திருப்பதி அடைகின்றேன்.

தமிழர் மீதும் தமிழ் பேசும் மக்கள் மீதும் எவ்வித அக்கறையும் தமக்கு இல்லை. தமிழ் மொழியை அலட்சியப் படுத்துகின்றோம். அவர்களை கணக்கில் எடுக்கத் தயாராக இல்லை என்றும் சிங்கள பௌத்த பேரினவாத போக்கை கடைபிடிப்பதாகவும் பகிரங்கமாக தெரியபடுத்தி இருக்கின்றனர்.

இந்த புதிய கட்சியில் அங்கம் வகிக்கும் தமிழ் தரப்பினர் இதை எடுத்துக் கூறவேண்டும். அப்படி எடுத்து கூறுவதிலும் பிரயோசனம் இல்லை என நான் நினைக்கின்றேன்.

இவர்களை நான் கட்சி என்று கூற போவதில்லை, கும்பல் என்று தான் கூறுவேன், தொடர்ந்தும் அப்படி தான் கூறுவேன்.

இந்த கும்பல் மஹிந்தவின் பொதுஜன பெரமுன கட்சியை விட்டு வந்ததுக்குக் காரணம், மஹிந்த மக்களுக்கான நிகழ்ச்சியை முன்னெடுக்காமல் தனது குடும்ப நிகழ்ச்சியை முன்னெடுத்தமை தான் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

இறுதியில் இந்த கும்பல் மஹிந்தவிடம் தான் செல்லும். இவர்களுக்கு அவரை விட்டால் ஆள் இல்லை. அவர்களுக்கும் அப்படி தான்.

மேலும், மஹிந்த தனது தவறை மறைக்க கோட்டாபய மற்றும் பசிலை பலிக்கடா ஆக்குகிறார். கோட்டாபயவை அரசியலில் ஈடுபடவேண்டாம் என்றும் பசிலை அமெரிக்கா செல்ல சொல்லியும் சொன்னதாகத் தகவல் கிடைத்தது.

மஹிந்த தமது குடும்ப ஆட்சியை நிறுத்த போவதில்லை. அடுத்து தனது மகனை முடிசூட பார்க்கிறார். இதை சிங்கள மக்கள் தான் தடுத்து நிறுத்த வேண்டும்.

இவர்களை மறுபடியும் நம்பி முட்டாள் தனமாக சிங்கள மக்கள் ஆட்சியில் அமர்த்துவார்கள் என்றால் இலங்கை இரண்டு நாடாக பிரிய வேண்டிய நிலை தான் ஏற்படும்.

சிங்களவர்களின் செயற்பாட்டால் தான் இப்போது தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களும் இவ்வளவு துன்பத்தை அனுபவிக்கின்றோம். இனியும் அப்படி இயலாது.

மறுபடியும் அந்த நிலைமை தொடரும் என்றால் தமிழர்களுக்கு தனி நாடு வழங்கி இலங்கை இரண்டாக பிரியும் நிலையே வரும். இது எனது ஆசை இல்லை ஆனால் நடப்பதற்கான வாய்ப்புக்கள் உள்ளது. – எனக் கூறினார்.

## உணவு பணவீக்கத்தில் மோசமான சாதனையை பதிவு செய்த இலங்கை

இலங்கையில் கடந்த மாதத்தில் உணவுத் துறையில் பணவீக்கம் 93.7 சதவீதமாக அதிகரித்துள்ளதாக, இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட புதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதத்தில் முட்டை, பிஸ்கட், கோழி, பாண், மீன், பருப்பு மற்றும் பழங்களின் விலைகள் பாரியளவில் அதிகரித்துள்ளன.

முந்தைய மாதமான ஜூலையில் உணவுத் துறையில் பணவீக்கம் 90.9 சதவீதமாக இருந்த நிலையில் ஒகஸ்ட் மாதத்தில் 93.7 சதவீதமாக அதிகரித்துள்ளது.

உலகிலேயே அதிக உணவுப் பணவீக்கத்தைக் கொண்ட நாடாக இலங்கை மாறியுள்ளது. இலங்கையை பொறுத்தவரையில் இந்தப் பணவீக்க நிலைமை ஒரு சாதனையாகும்.

1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் உணவுத் துறையில் பணவீக்கம் இந்த அளவுக்கு உயர்ந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

உணவு தொடர்பான பணவீக்கம் 93.7 சதவீதமாக பதிவாகியுள்ள நிலையில், ஒகஸ்ட் மாதத்தில் உணவு அல்லாத பொருள்களின் பணவீக்கம் 50.2 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

## மூடும் நிலைக்குத் தள்ளப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள்!

இலங்கை பெற்றோலியக் கூட்டுறவு அறிமுகப்படுத்தியுள்ள புதிய கட்டண முறையின் காரணமாக 400 நிரப்பு நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன என, எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்தார்.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள், அடுத்த நாளுக்கான எரிபொருளைப் பெற்றுக்கொள்ள, முன்கூட்டியே பணம் செலுத்தும் திட்டத்தை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

அரசாங்கம்700எரிபொருள்நிரப்புநிலையங்களை வெளிநாட்டு எண்ணெய் நிறுவனங்களுக்கு வழங்கவுள்ள நிலையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம், சவுதி அரேபியா, அமெரிக்கா, சீனா, இந்தியா, ரஷ்யா, பிரிட்டன், மலேசியா, நோர்வே மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த 24 நிறுவனங்கள் இதற்காக முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் மறுநாளுக்கான எரிபொருளை வெறுவதற்கு முதல் நாள் இரவு 9.30 மணிக்கு முன்னர் பணம் செலுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக ராஜபக்ஷ கூறினார்.

எனினும்வருமானத்தைநம்பிபணம்செலுத்துவது அவர்களுக்கு கடினமாக உள்ளது என்று அவர் குறிப்பிட்டார். முதல் நாள் இரவு 9.30 மணிக்குள் அல்லது அதற்கு முன் பணம் செலுத்தப்படாவிட்டால், அடுத்த நாள் இலங்கை பெற்றோலிய சேமிப்பு முனையங்கள் எரிபொருளை வழங்காது என்று அவர் கூறினார்.

இதன் விளைவாக, சில நிரப்பும் நிலையங்கள் மூடப்பட்டன. அத்துடன் எரிபொருளுக்கான நீண்ட வரிசை காணப்பட்டமைக்கான காரணம், எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இரவு 9.30 மணிக்கு முன் பணம் செலுத்த முடியவில்லை என்பதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

லங்கா ஐஓசி நிரப்பு நிலையங்களும் இதேபோன்ற கட்டண முறையைக் கொண்டுள்ளன, ஆனால் அவை நள்ளிரவு வரை காலக்கெடுவைக் கொண்டுள்ளன.

நாடு வழமைக்கு திரும்பியுள்ள நிலையில் நுகர்வோர் தேவையும் அதிகரித்துள்ளதால் எரிபொருள் விநியோகம் அதிகரிக்கப்பட வேண்டும் என்று கூறிய ராஜபக்ஷ, ஒரு நாளைக்கு 4000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 3000 மெற்றிக் தொன் பெற்றோல் விநியோகத்தை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மட்டுப்படுத்தியுள்ளதாகச் சுட்டிக்காட்டினார்.

# எரிவாயுவின் விலை குறைப்பிற்கமைய உணவு விலையை குறைக்கமுடியாது

## அகில இலங்கை சிற்றுண்டி உரிமையாளர் சங்கம் திட்டவட்டம்

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும், சிற்றுண்டி சாலையின் உணவுப் பொருள்களின் விலையைக் குறைக்க முடியாது. தற்போதைய நிலைக்கமைய விலையை அதிகரிக்கவே நேரிடும்.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானித்துக்கொள்வதால் பொருள்களின் விலை கட்டுப்பாடற்ற வகையில் உயர்வடைகிறது என அகில இலங்கை சிற்றுண்டிசாலை உரிமையாளர் சங்கத்தின் தலைவல் அசேல சம்பத் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிவாயு விலை குறைவடைகிறது என லிற்றோ நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டுள்ளமை வரவேற்கத்தக்கது.

எரிவாயு விலையை குறைத்து பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதை முழுமையாக ஏற்றுக்கொள்கிறோம்.

எரிவாயு விலை குறைக்கப்பட்டாலும், சிற்றுண்டி சாலை, ஹோட்டல் உணவு பொருள்களின் விலையை குறைக்க முடியாது.

கோதுமை மா,பருப்பு உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை ஒவ்வொரு பிரதேசத்துக்கும் ஒவ்வொரு விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.பெரும்பாலான பகுதிகளில் ஒரு கிலோ கிராம் கோதுமை மா 420 ரூபாவிற்கு விற்கப்படுகிறது.

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலை நியாயமற்ற முறையில் அதிகரித்துள்ள நிலையில் சிற்றுண்டிசாலை மற்றும் ஹோட்டல் உணவுப் பொருள்களின் விலையை ஒருபோதும் குறைக்க முடியாது, விலையை அதிகரிக்கவே நேரிடும்.

இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலையை வர்த்தகர்கள் தீர்மானித்துக்கொள்வதால் பொருள்களின் விலை கட்டுப்பாடற்ற வகையில் அதிகரித்து செல்கின்றது. அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு அரசாங்கம் கட்டுப்பாட்டு விலையை விதிக்க வேண்டும். – என்றார்.



காலைக்கதிர்
Kalaikkathir

**இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.**



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 114

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## ஆயுதக் களைவுக்கான தீர்மானம்

மதியுரைஞர் பாலசிங்கம் குறிப்பிட்டவாறே விடுதலை புலிகளுக்கு எதிராகவும் அவர்களது ஆயுதங்களைக் களைவது என்ற தீர்மானமும் ராஜீவ் உட்பட இந்திய உயர் அதிகார மட்டத்தில் எடுக்கப்பட்டது தான்.

ஆனால் அந்தத் தீர்மானத்திற்காக விடுதலை புலிகளின் நிலைப்பாடும், அவர்கள் உள சுத்தியுடன் இந்தியாவுடன் இணைந்து தென்பகுதியை கட்டுப்படுத்த உதவியாக இருப்பார்களா என்பதும் பார்க்கப்பட்டன.

தூதரகத்தில் அரசியல் செயலாளர்களின் அறிக்கைகள், அவர்களது கருத்தாக்கங்கள், புலனாய்வு மற்றும் உளவுப் பிரிவினரின் தகவல்கள், தமிழ் மக்களின் புலம்பெயர் அமைப்புகளின் அறிக்கைகள், செயற்பாடுகள் எவயுமே இந்தியாவுக்கு அந்த விடயத்தில் நம்பிக்கையைத் தரவில்லை.



ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால் வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளும் தென்பகுதியில் ஜே.வி.பியும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கணிப்பு பெறப்பட்டது. விவரங்களுக்காக இலங்கை வந்து சென்ற இராணுவ தளபதி சுந்தர்ஜி மேலும் அதிகார மட்டத்தில் கலந்து, வடக்கிலும் கிழக்கிலும் புலிகளும், கிழக்கில் ஜே.வி.பியும் கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற உத்தரவை விடுத்தார். ஜே.வி.பியை தென்பகுதிகளில் கட்டுப்படுத்துவதற்கு ஜே.ஆர். பொறுப்பேற்றார்.

இப்படியான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன என்பது புலனாய்வு பகுதிகளினாலும் றோவினாலும் விடுதலைப் புலிகளுக்கும் ஜே.வி.பி. தலைமைகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது.

நேரடி மோதல்கள் வெடிக்க முன்னர் யாழ்ப்பாண பகுதிகளில் இந்தியப் படையினருக்கும் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் தனிப்பட்ட ரீதியில் நேச உறவுகள் இருந்தன. இந்திய படையினரைக் கள்ளுக் கொட்டில்களில் உபசரித்தார்கள். திருமண வைபவங்களுக்கு அழைத்தார்கள். இந்தப் பரிபாடல்களில் இந்திய தளபதிகள் கூட நிலைமைகளைச் சீர்கெட விட வேண்டாம் என நேரடியாகவே அறிவுறுத்தி இருந்தார்கள்.

இதே மாதிரியாக ஜே.வி.பி. தலைமைகளுக்கும் தமிழ் பகுதிகளில் அவர்களை இந்திய படையினர் நேரடியாகத் தாக்குவார்கள் என்றும், தேவை ஏற்படும் என்றால் தெற்கிலும் இறங்குவார்கள் என்பதும் தெரியப்படுத்தப்பட்டது. ஜே.வி.பியுடனான அணுகுமுறைகளில் நிரூபம் சென்னும் ஹர்தீப் சிங் பூரியும் ஈடுபட்டிருந்தனர். விடுதலை புலிகளையும் மற்றைய போராளிகளையும் டிக்ஸிற்றும் ஜெய்சங்கரும் கையாண்டார்கள்.

இந்தியா இப்படியான தீர்மானங்கள் எடுப்பதால் நிலைமைகள் சீரழியலாம் என்ற எண்ணத்தில் விடுதலைப் புலிகளுக்கு பேச்சுவார்த்தைகளில் ஓர் ஒழுங்குக்கு வரலாம் என்ற எண்ணம் இருந்தது.

ஸ்ரீலங்காவின் இராணுவம் அரசியல் மையப்பட்டது. அவர்களுக்குத் தரப்பட்ட அரசியல் போதனைகளிலேயே முக்கியமாக இயங்கினார்கள். 1956,1958, 1977, 1983 எனத் தொடர்ச்சியாக நடந்த இனக் கலவரங்களாலும் மற்றைய அரசியல் வன்முறைகளாலும் அவர்கள் நெடிய நாள்கள் வீதிகளில், பொது சந்தைகளில் காவலுக்கு நின்றார்கள். அந்த நேரங்களில் பொதுமக்களிடம் உணவுப் பார்சல்கள் பெற்று, உறவாடி, அரசியல் கதைத்தார்கள்.

1979க்குப் பின் ஜே.வி.பி. தங்களுக்கு ஆதரவாக இருந்த பல இளைஞர்களை இராணுவத்தில் சேர்த்தமையால் அங்கும் ஜே.வி.பியின் கருத்தியலுக்கு ஆதரவு இருந்தது. அதாவது தங்களது மக்களுக்கு எதிராகப் போராடாமல் விடுதலைப் புலிகளுக்கும் இந்திய படைகளுக்கும் எதிராகவுமே போராட விரும்பினார்கள்.

அதற்கு எதிர் மாறாக இந்திய இராணுவம் அரசியல் மையப்பட்டது அல்ல. அது



கணக்குத் தர வேண்டிய கட்டுப்பாடுகளில் உத்தரவு அளிக்கப்பட்டதால் அதை நடைமுறைப்படுத்த வேண்டும், தவறினால் விளைவுகளைச் சந்திக்க வேண்டும் என்ற பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்டவர்கள். விடுதலைப் புலிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற உத்தரவுகள் வந்ததும், நிலைமையைச் சீரழிக்க விரும்பாத தளபதிகள் கூட அவற்றைச் செயற்படுத்த வேண்டியதாயிற்று.

மாற்றாக, விடுதலை புலிகளும் ஒரு தலைமையின் கட்டமைப்பில் வாழ்ந்தவர்கள். தமிழீழம் என்ற அரசியலுக்காகவும் லட்சியத்திற்காகவும் பல இன்னல்களைச் சந்தித்தவர்கள். அவர்களும் கட்டளை என வந்தால் இருந்த நட்புறவுகளையும் மறந்து, அல்லது அவர்கள் அவற்றைப் பார்க்காமல் காரியங்களில் இறங்குவார்கள்.

யுத்தம் கட்டவிழ்க்கப்பட்டதும், இந்திய இராணுவம் இராணுவமாகத்தான் உன்மத்தத்துடன் காரிய சித்திக்காக இயங்கியது. அவர்களுக்கு எதிராக விடுதலைப் புலிகளும் அவ்வாறே இயங்கினார்கள். இடையில் தமிழ் மக்கள் அகப்பட்டு நசிந்தார்கள்.

(வளரும்...)





Members from Operation Pawan



## பொறுப்புக் கூறலில் இருந்து தப்புவதற்காக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு மேலும் கால அவகாசத்தை இலங்கை அரசுத் தரப்பினர் கோருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதியாக வந்தாலும், இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை பெரியளவில் மாற்றப்படவில்லை. மாற்றங்கள் இல்லாத ஒரு சூழ்நிலையில் அமெரிக்க சார்பு நாடுகள் இலங்கையை பாதுகாக்குமா என்ற கேள்வி எழுகின்றது எனவும் அவர் கூறினார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே சுரேஷ் பிறேமச்சந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எதிர்வரும் செப்டம்பர் 12 ஆம் திகதி ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகிறது. அன்றைய தினத்தில் இலங்கை தொடர்பான அறிக்கையும் சமர்பிக்கப்படவுள்ளது. இதன் போது இலங்கை இதுவரை என்ன செய்தது என்பது தொடர்பில் ஆராயப்படும்.

காணாமல்போனோருக்கான அலுவலகத்தைத் திறந்ததைத் தவிர வேறு எதுவும் இங்கு நடைபெறவில்லை.

கோட்டாபய அரசாங்கம் ஜெனிவாத் தீர்மானங்களில் இருந்து வெளியேறுவதாக அறிவித்திருந்தது. தற்போது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்திருக்கின்றார். நாடு பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள போது தங்களுக்கு எதிரான தீர்மானம் பாரதூரமான நிலையை ஏற்படுத்தலாம் எனக்கோரி கால அவகாசத்தை அவர்கள் கோருவார்கள் என எதிர்பார்க்கிறோம். நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைக் காரணம் காட்டி இன்னும் கால அவகாசம் தாருங்கள் என்று அரசு கேட்கவுள்ளது. ஆகவே பொறுப்புக்கூறலில் இருந்து தப்பித்துக்கொள்வதற்கு அரசு தயாராகி வருகிறது.ஆனால் சர்வதேசத்தின் முன் இலங்கை நிறுத்தப்பட வேண்டும் என பலரும் முயற்சி எடுத்து வருகின்றனர்.

இது தவிர கோட்டா அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் எல்லாம் இலங்கை அரசுக்கு எதிராவே காணப்படுகின்றன. இதே வேளை தமிழ் தரப்பில் ஒரு காத்திரமான ஒரு தீர்மானம் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் ரணில் ஜனாதிபதியாக தற்போது இருந்தாலும், வெளிவிவகாரக் கொள்கை பெரியளவில் மாற்றப்படவில்லை. மாற்றங்கள் இல்லாத ஒரு சூழ்நிலையில் அமெரிக்க சார்பு நாடுகள் இலங்கையைப் பாதுகாக்குமா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த நிலையில் இலங்கை அரசு சீன சார்பில் இருந்து வெளியே வந்தால், இலங்கை அரசை ஏனைய நாடுகள் காப்பாற்றும் நிலை வரும்.

இலங்கை அரசாங்கத்தால் இந்திய அரசாங்கம் பலமுறை ஏமாற்றப்பட்டு இருக்கிறது. இந்தியாவுக்கு கொடுக்கப்பட்ட உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் காப்பாற்றியதாக வரலாறு இல்லை.

தமிழ் மக்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை.

இந்து சமுத்திரம் அமைதிப் பிராந்தியமாக இருக்க வேண்டுமென இந்தியா விரும்புகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனா எடுத்து இருக்கின்றது. 99 வருடங்களில் என்னென்ன நடக்கும் என்பதற்கு முத்தாய்ப்பாக சீனாவின் உளவுக் கப்பல் வந்து செல்கின்றது. இந்தியா அதனை எதிர்த்த போதும் இலங்கையால் அதனை மறுதலிக்க முடியாத நிலைமை காணப்படுகிறது.

தமிழ்மக்களின்தேசிய இனபிரச்சினை தொடர்பாக சீனாவுடன் பேசுவதாக இருந்தால் தங்களுக்கும் உள்விவகாரத்துக்கும் சம்பந்தமில்லை என்றும் உள்நாட்டு பிரச்சனையை நீங்களே தீருங்கள் என்ற பதிலே சொல்லப்பட்டு இருக்கின்றது - சொல்லப்படும்.

தமிழ் மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, தங்களது ஆளுமை என்பது இந்து சமுத்திரத்தில் இருக்க வேண்டுமென இந்தியா விரும்புகிறது.

இந்தியாவினுடைய பாதுகாப்புக்கும் நலன்களுக்கும் எதிரான நடவடிக்கைக்கு இடமளிக்க முடியாது.

இலங்கை ஜனாதிபதியுடனான சந்திப்பில் ரெலோ பல விடயங்களைப் பேசியதாக செய்தி வெளியாகி இருந்தது. நிச்சயமாக ஜெனிவா கூட்டத் தொடருக்கு பின்பாக இந்தச் சந்திப்பை நிகழ்த்தி இருக்கலாம்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கு முன்பே பல வாக்குறுதிகளை கொடுத்திருக்கின்றார்.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை தொடர்பாக நாங்கள் ஏற்கனவே கூட்டாக எடுத்த தீர்மானங்களில் இருந்து ரெலோ விலக மாட்டாது என்று நம்புகின்றேன். எடுத்த தீர்மானங்களை உறுதியாக இருப்பார்கள். செல்வம் அடைக்கலநாதன் ஜெனீவா சென்று இது தொடர்பாக தெளிவாகப் பேசுவார் - என்றார்.

## கோட்டாபய மீது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தங்கியிருந்தார் .

ஜனாதிபதி அதிகாரத்தை இழந்துள்ள கோட்டாபய ராஜபக்ஷ இப்போது கடந்தகால குற்றங்களுக்காக நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று அரசுக்கு எதிரான அமைப்புகளின் தலைவர்கள் தெரிவித்து வருகின்றனர் .

எந்த நாடும் அவரை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அவர் மறைந்து கொள்ள இடமில்லை.?எனவே கோத்தபாய திரும்பினார், என்று ஆசிரியர் தொழிற்சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார் .

இலங்கையில் உள்ள 22 மில்லியன் மக்களுக்கு இத்தகைய வேதனையை ஏற்படுத்தியதற்காக அவர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். அவரது செயல்களுக்கான பொறுப்பு வழங்கப்பட வேண்டும். அவருடைய செயல்களுக்கு அவர் மட்டுமே பொறுப்புக் கூற வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுப்பெற்று வருகின்றன.

இலங்கைப் பொருளாதாரம் முன்னெப்போதும் இல்லாத வகையில் சரிவை நோக்கிச் சென்றதால், ராஜபக்ஷவின் அரசாங்கம் குழப்பமான, தவறான நிர்வாகத்தில் ஈடுபட்டதாகப் போராட்டக்காரர்களால் குற்றம் சாட்டப்பட்டது.

”உணவுப் பொருடள்களின் கடுமையான தட்டுப்பாடு, நீண்ட மின்தடை மற்றும் எரிபொருள் விநியோகத்திற்காக பெற்றோல் நிலையங்களில் நீண்ட வரிசைகள் ஆகிய நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டார்கள் எனவே எதுவும் நடக்காதது போல் அவரால் சுதந்திரமாக வாழ முடியாது என்று ஜோசப் ஸ்டாலின் கூறியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்த ராஜபக்ஷவை அமைச்சர்கள் மற்றும் மூத்த அரசியல்வாதிகள் வரவேற்றுள்ளனர் . ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட தலைநகரில் உள்ள புதிய உத்தியோகபூர்வ இல்லத்திற்கு பாதுகாப்புத் தொடரணியில் கோட்டாபய அழைத்துச் செல்லப்பட்டார்.

இந்நிலையில் 2009 ஆம் ஆண்டு பிரபல ஊடகவியலாளர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டதில் கோட்டாவின் பங்கு உட்பட பல குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் அவரின் மீது வழக்குத் தொடர அழுத்தம் கொடுப்பதாக உரிமை ஆர்வலர்கள் உறுதியளித்துள்ளனர்.

அவர் இழைத்த குற்றங்களுக்காக அவரை நீதியின் முன் நிறுத்துவதற்கு அவர் நாடு திரும்பும் முடிவை நாங்கள் வரவேற்கிறோம் என்று இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் தரிந்து ஜெயவர்தன வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளார் .

ராஜபக்ஷ ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு அவர் மீது போடப்பட்ட பல ஊழல் வழக்குகள் முடங்கின.

2009 இல் உள்நாட்டுப் போரின் முடிவில் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை மற்றும் தமிழ் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டதற்காக குற்றச்சாட்டுகளை கோட்டா எதிர்கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் - 076 443 8622






# நாட்டில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஜனாதிபதிகளில் கோட்டாவும் ஒருவர்!



## அநுராத ஜயரத்ன புகழாரம்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு அடுத்த தலைமுறையினருடன் தொடர்பில் இருப்பது முக்கியம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளு மன்ற உறுப்பினர் அநுராத ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

சுதந்திர நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஆரம்பிக் கப்பட்ட புதிய கூட்டமைப்பான 'உத்தர லங்கா சபை'யை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வின் போது ஊடகவியலா ளர்களிடம் கருத்துரைத்த ஜயரத்ன,

தீவிர அரசியலில் ஈடுபடுகின்றமை தொடர்பாக முன் னாள் ஜனாதிபதி எவருக்கும் அறிவிக்கவில்லை எனத் தெரிவித்தார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி மீண்டும் அரசிய லுக்கு வருவார் என தாம் நம்பவில்லை எனவும் தெரி வித்துள்ளார்.

எவ்வாறாயினும், அவரது பதவிக்காலம் இரண்டு ஆண்டுகள் மட்டுமே என்றபோதும், முன்னாள் ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கையில் மிகவும் அனுப வம் வாய்ந்த ஜனாதிபதிகளில் ஒருவர் என்று அவர் வலியுறுத்தினார்.

எனவே நாம் அவரை அடுத்த தலைமுறையின ருடன் தொடர்பில் இருக்க வேண்டும், இதன்போதே அவர் தனது அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியும். - என்று அவர் தெரிவித்துள்ளார்.

# கடற்படையினரின் தாக்குதலினால் கிளிநொச்சியில் குடும்பஸ்தர் காயம்!

கிளிநொச்சி வலைப்பாடு பகுதியில் குடும்பஸ்தர் மீது கடற்படையினர் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இந்த சம்பவத்தை அடுத்து இரண்டு தொலைபேசிகளும் திருடப்பட்டுள்ளன எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்ற இந்த சம்பவத் தின் போது வலைப்பாடு பகுதியைச் சேர்ந்த 43 வயது டைய இராசரத்தினம்நிமால் எனப்படும் 3 பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

மேற்படி நபரின் படகை, அவரது நண்பர்கள் கட லுக்கு எடுத்துச்சென்றிருந்த நிலையில், மாலை ஆகி யும் கரை திரும்பாத நிலையில் அந்த நபர் கடற்கரைக்கு சென்று அவதானித்துள்ளார்.

6 மணியளவில் கரைக்குத் திரும்பிய படகு, கடற் படை முகாமிற்கு முன்பாகக் கரை ஏற்றப்பட்டது. இந்த நிலையில், படகைச் செலுத்தியவர்கள், கடற்படை முகாமிற்கு பதிவிற்காகச் சென்றுள்ளனர்.

இதன்போது தமது படகில் ஏற்றி வந்த மண்ணெண் ணெயை பதிவு மேற்கொள்ளும் பகுதிக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த மண்ணெண்ணெய் கொள்கலனை அகற்ற மாறு அவர்களிடம் கடற்டை அதிகாரி ஒருவர் தெரி வித்ததை அடுத்து அவர்கள் அதனை அகற்றியுள்ளனர்.

இதனையடுத்து இரு தரப்பனருக்கும் இடையில் கருத்து முரண்பாடும் ஏற்பட்டுள்ளது.

6.30 மணியளவில் இடம்பெற்ற கருத்து முரண் பாட்டின்போது, கடற்படை அதிகாரி ஒருவர் அவர்களை அச்சுறுத்தும் வகையில் துப்பாக்கியை சூட்டுக்கு ஏற்ற வகையில் தயார் செய்தார் எனவும், அதனை ஒளிப்பதிவு செய்ய முற்பட்டபோது தொலைபேசியைப் பறித்து, பின் னர் தாக்கினார் எனவும் தெரிவிக்கின்றார்.



தன்னையும், தன்னுடன் நின்றவர்களையும் கடற் படையினர் துரத்தி துரத்தி தாக்கினர் எனவும், இதன் போது தான் படுகாயமடைந்தார் எனவும் பாதிக்கப்பட்ட நபர் தெரிவித்துள்ளார்.

படுகாயங்களுக்குள்ளான நபர் சுயநினைவிழந்து கிடப்பதை அவதானித்த கிராமத்தவர்கள், அவரை வேரவில் வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

தொடர்ந்து மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த தாக்குதல் சம்பவத்தின்போது ஒரு பல் முழு மையாக அகற்றப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு பல், விழும் அபாய நிலையில் உள்ளதாக பாதிக்கப்பட்டவர் களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, மேற்படி நபருக்கு சொந்தமான இரண்டு கையடக்கத் தொலைபேசிகளும், கடற்படையி னரால் எடுத்து செல்லப்பட்டுள்ளன எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அரச வங்கிகளில் அடமானம் வைக்கப்படும் நெல் இருப்புகள்

நடப்பு பருவத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல்லை கொள்முதல் செய்யத் தேவையான பணத் தைப் பெறுவதற்காக அரசு, தனது நெல் இருப்பு களை அரச வங்கிகளில் அடமானம் வைக்க உள்ளது.

அரச வங்கிகள் நெல் கொள்வனவுக்காக, அரச நிறுவனமான நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு கடன் வழுங்க இயலாது என்று அறிவித்ததை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு, அரச வங்கிகளில் சுமார் 200 கோடி ரூபா கடன் நிலுவையில் உள்ளதன் காரணமாகவே, அரச வங் கிகள், சபைக்கு கடன் வழுங்க மறுத்துவிட்டன.

இந்தநிலையில் 30 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் வாங்குவதற்கு, பங்குகளை வங்கிகளில் அடமானம் வைத்து 200 கோடி கடனாகப் பெறுவ தற்கு கடந்த வெள்ளிக்கிழமை அனுமதி வழுங்கப் பட்டதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தலைவர் நீல் அல்விஸ் தெரிவித்துள்ளார்.

நெல் இருப்புகளில் பெரும்பாலானவற்றைத் தனியார் துறையினர் சேகரிப்பதைத் தடுப்பதை உறுதி செய்வதே இதன் நோக்கமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

2021/22 பெரும்போக நெல் கொள்வனவுக ளுக்காக, சபை இலங்கை வங்கியிடமிருந்து 650 கோடி ரூபாக்களை பெற்றுள்ளதுடன், இதுவரை 446 கோடியே 40 லட்சம் ரூபா மாத்திரமே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது.

2019ஃ20 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்காக, நெல் சந்தைப்படுத்தும் சபை, மக் கள் வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளதுடன், 75 கோடி 90 லட்சம் ரூபா இன்னும் நிலுவையில் உள்ளது.

# பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு சுமார் 1,648 கோடி ரூபா செலவு!

## கல்வி அமைச்சு தகவல்

*எதிர்வரும் 2023 ஆம் ஆண்டுக்கான பாட சாலை பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கு சுமார் 1,648 கோடி ரூபாவை செலவிட எதிர் பார்க்கப்படுவதாக கல்வி அமைச்சு தெரி வித்துள்ளது.*

*இதன்படி, புதிய கல்வியாண்டுக்குத் தேவை யான பாடசாலைப் பாடப்புத்தகங்களில் 45 வீதமானவை அரச அச்சக கூட்டுத்தாபனத் தாலும் ஏனைய 55 வீதம் தனியார் அச்சகங் களாலும் அச்சிடப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது.*

*மேலும், பாடப்புத்தகங்களை அச்சிடுவ தற்கான மூல காகிதம் இந்திய கடன் உத வியின் கீழ் இறக்குமதி செய்யப்படும் என்றும் அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.*

*இதே வேளை, 2022ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை கல்வி நடவடிக்கைகள் செப்ரெம்பர் மாதம் 07 ஆம் திகதியுடன் நிறை வடையும் என்றும், இரண்டாவது தவணை செப்ரெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமா கும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.*

# இலங்கை கடற்படையின் தாக்குதல் 5 இந்திய மீனவர்கள் படுகாயமடைவு!

தமிழகத்தின் காரைக்காலை சார்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட கொடூர தாக்குதலால், ஐந்து பேர் படுகாயமடைந்த நிலையில் ஒருவர் தஞ்சை அரசு மருத்துவமனையில் மேலதிக சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

காரைக்கால் மாவட்டம் காரைக்கால் மேடு பகுதி யைச் சேர்ந்தவர் ராஜ்குமார் என்பவருக்கு சொந்த மான விசைப்படையில் கடந்த இரண்டாம் திகதி இரவு காரைக்கால் துறைமுகத்தில் இருந்து 15 பேர் மீன் பிடிக்க கடலுக்குள் சென்றனர்.

கோடியக்கரைக்கு தென்கிழக்கு இந்திய எல் லைக்குள் அவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது அங்கு அத்துமீறி நுழைந்த இலங்கை கடற்படை யினர், மீன்பிடித்துக் கொண்டிருந்த ராஜ்குமார் படகை சுற்றி வளைத்து கடுமையாகத் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் விசைப்படகில் இருந்த திசைகாட்டும் கருவி, வாக்கி டாக்கி மற்றும் ஜிபிஎஸ் கருவி உள்ளிட்ட உபகர ணங்களை சேதப்படுத்தியுள்ளனர் என்று கூறப்பட்டுள் ளது.

படகில் இருந்தவர்கள் மீது கொடூர தாக்குதல் நடத்தி யதில் ராஜ்குமார் தண்டபாணி, மதன், அருண்குமார் மாணிக்கவேல் சூர்யா ஆகிய ஆறு பேர் பலத்த காயம டைந்தனர்.

நேற்று (திங்கட்கிழமை) கரை திரும்பிய இவர்கள்



காரைக்காலில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் படகின் உரிமையாளர் ராஜ்குமார் பலத்தகாயமடைந்தநிலையில், மேலதிக சிகிச்சைக்காக தஞ்சைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என இந்தி யச் செய்திகள் தெரிவித்துள்ளன.

சம்பவம் தொடர்பாக காரைக்கால் மீன்வளத்துறை மற்றும் மாவட்ட ஆட்சியரிடம் பாதிக்கப்பட்ட மீனவர்க ளின் உறவினர்கள் முறைப்பாடளித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காரைக்கால் பகுதி மீனவர்கள் இடையே கடும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக தமி ழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.09.2022இல் வெளியிடப்பெற்றது.